
www.tamilarangam.net



# என்ன செய்யவேண்டும்?.....

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!.......

எமது தேசத்தின் ஒவ்வொரு வீட்டுக் கதவுகளையும் யுத்தத்தின் கோரக்கரங்கள் தட்டிக் கொண்டிருக்கின்றன. யுத்த நெருப்பில் மொத்தத் தேசமும் எரிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் என்ன செய்யவேண்டும?..... இதுவே இன்றுள்ள நிலையில் எம்முன் எழுந்திருக்கும், எம் தோள்களின் மீது சுமையாக விழுந்திருக்கும் கேள்வியாகும்.

யுத்தம் என்பதும் இரத்தம் சிந்துகின்ற அரசியல்தான். இந்த யுத்தத்தின் நீடிப்பே அரசியலாகிவிடுகின்றது. எம்மைப்பொறுத்தவரையில் - ஈ.பி.டி.பி யைப் பொறுத்தவரையில் அரசியலுக்காக அன்றி, மக்களுக்காகவே எமது ஒவ்வொரு நகர்வுகளும் இருக்கவேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம்.

நாம் யாருக்காகப் போராடுகின்றோம்?.... அது மக்களுக்காகத்தான் என்றால் மக்களிடமிந்துதான் நாம் கற்கவேண்டும். ஆயுதப் போராட்டத்தை நாம் மக்களுக்கு அறிமுகப் படுத்தியபோது, அதைக் கொண்டு நகர்த்தியபோது மக்களாகிய நீங்கள் எமக்குப் பக்கபலமாக இருந்தீர்கள். பங்கெடுத்தீர்கள். இன்னல்களுக்கும், இழப்புக்களுக்கும் முகங்கொடுக்க முன் வந்தீர்கள். ஆனால் இன்று உரிமைகளுக்காகப் போராடவேண்டிய நீங்கள் யுத்தத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றீர்கள். யுத்தத்தினால் நீங்கள் அடைகின்ற அவலங்களையும், அவஸ்தைகளையும் நாம் சரிவரக்கற்றுக் கொண்டவர்கள். யுத்தமா?.... சமாதானமா?.... இதில் தேவை எதுவென்று உங்களிடமிருந்தே கற்றுக்கொண்டவர்கள்.

நீண்டுசெல்லும் முடிவற்ற யுத்தத்தை நிறுத்தி, ஆரோக்கியமான அரசியற் சூழலொன்றை உருவாக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய அரசியற் தீர்வொன்றினால் மட்டுமே அது சாத்தியப்படும். ஆகவேதான் யுத்தத்தில் ஈடுபடுகின்றவர்களை நோக்கியும் எமது கோரிக்கையினை நீண்ட நாட்களாகவே நாம் விடுத்து வருகின்றோம். நாம் விடுக்கின்ற இந்தக் கோரிக்கை மக்களாகிய உங்களின் இழப்புக்களிலிந்தே பிறந்திருக்கின்றது. உங்கள் அவலங்களிலிருந்தே பிறந்திருக்கின்றது.

பதினையாயிரம் போராளிகளையும், அதைவிடப் பன்மடங்கு பொதுமக்களையும் பலிகொடுத்தபின்பும் எமக்குப் போதுமானது ஒரு அரசியற் தீர்வுதானா?.... என்ற கேள்வியும் இந்தச்சூழலில் எழுவதை நீங்கள் அறிவீர்கள். இப்படிக் கேள்வியெழுப்பிக் கொண்டு யுத்தம் தொடரப்படுமேயானால் இழப்புக்கள் இன்னமும் பெருகி இரட்டிப்பாகுமேயொழிய, இழப்புக்களிலிருந்து விடுபட்டுக் கொள்வதற்கான எந்த வழியினையும் நாம் பெற்றுவிடமுடியாது. பட்டுவேட்டி பற்றிய கனாவில் இருந்தால் கட்டியுள்ள கோவணமும் களவாடப்பட்டுவிடும் என்ற கவிஞனின் கூற்றையும், குளம் வற்றுமென காத்திருந்தால் கொக்கு குடல்வற்றி செத்துவிடும் என்ற முதுமொழியையும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையானதொரு தீர்வெனக் கொள்ளப்படா விட்டாலும், சில விமர்சனங்களுக்குப்பட்டதாக இருந்தாலும் இதுவரையில் எமக்குக் கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பு என்றுதான் கூறவேண்டும்.

தமிழ் பேசும் எல்லாத்தரப்பினரும் அதை எற்றுக்கொண்டிருந்தால், சரியான முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்தப் பத்து வருடங்களில் எமது இலக்கு நோக்கி நகர முடிந்திருக்கும். அதை ஒரு முழுமையான தீர்வாக மாற்றியிருக்க முடிந்திருக்கும். இதுவரைகாலமும், சமாதானத்திற்கான சூழல்கள் பல தடவைகள் கனிந்து வந்தன. ஆனால் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் எம்மவர்கள் சரிவரப் பயன்படுத்தியிருக்கவில்லை. இனிவரும் சந்தர்ப்பங்களையாவது சரிவரப் பயன்படுத்தியாக வேண்டும். இன்றைவிட நாளைய தடைகள் இன்னமும் அதிகமாகிவிடும் என்ற எச்சரிக்கை உணர்வும் எம்மவர்களுக்கு இருக்க வேண்டும்.

www.tamilarangam.net

இரப்பவனுக்கு இருமல் வந்தால் சந்தோசம். மக்களுக்கு அவலங்கள் வந்தால் அதில் ஆதாயம் தேடுவதற்கு ஒரு கூட்டம். அறிக்கை விடுவதற்கு இன்னொரு கூட்டம். ஈ.பி.டி.பி யைப் பொறுத்தவரையில் மக்களாகிய உங்களின் அவலங்களைத் தீர்க்கின்ற அமைப்பேயொழிய அவலங்களில் ஆதாயம் தேடும் அமைப்பல்ல. அறிக்கைவிட்டுக் காலம் தள்ளும் கட்சியல்ல. யுத்தத்தின் மத்தியில் சிக்குண்டு போயிருக்கும் மக்களின் அன்றாடப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டும் என்பதும் எமது நோக்கமாகும்.

தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் அழிவை மட்டுந்தான் தருகின்றது. ஆக்கத்தை உருவாக்கும் எந்த வழிமுறைகளையும் அது தருவதாக இல்லை. மக்களை அகதிகளாக அலையவிட்டு புல்வெளிகளையும், மரநிழல்களையும், வாழ்விடங்களாக்கியுள்ளது. மனிதப் படுகொலைகளையும், மரண ஓலங்களையும், மடிந்து போனவர்களின் சமாதிகளையும் தான் தேடிக் கொடுத்திருக்கின்றது. ஆனால் எமது வழிமுறைகளோ ஆக்கத்தையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிகின்றபோது, சமாதானசூழலொன்று இங்கு உருவாகும் போது எஞ்சியிருப்பது ஆரம்பக் கல்வியில்லாத சிறார்களும், எழுத்தறிவற்ற இளம்சந்ததியினரும் தானா?.... தொழில்நுட்பக் கல்வியற்ற மாணவர்களும், அறிவுஜீவிகள் இல்லாத சமுதாயமும் தானா?.... சீரழிந்துபோன கலாச்சாரமும், சீர்குலைந்துபோன பொருளாதாரமும் தானா?... உடைந்துபோன வீதிகள், பாழடைந்துபோன கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள்.... இவைகள் தானா?... மக்களாகிய உங்களின் அன்றாடப் பிரச்சினைகளோடு, இதுபோன்ற அபிவிருத்திப் பணிகளிலும் எம்மால் இயன்றவற்றை இன்று செய்யமுடிகின்றது. இதுவே எதிர்காலம் குறித்த ஒரு நம்பிக்கையையும் எம் தேசத்திற்குக் கொடுக்கின்றது. இதுபோன்ற பணிகள் இன்னமும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!.... உங்களது அன்றாடப் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காணமுற்படுகின்ற போதெல்லாம், மக்களை சொகுசாக வைத்திருக்க நினைப்பவர்கள்...... சலுகைகளுக்காகப் போராடுபவர்கள்... என்றெல்லாம் எம்மீது வசைபொழியப்படுகின்றது. எது சலுகை?... எது உரிமை?... இந்தத் தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்கள் மக்களாகிய நீங்கள் தான்.

ஆயுதப் போராட்டத்தை நாம் பிழையென்று ஒருபோதும் கருதியதில்லை. சமகாலச் சூழலை நியாயப்படுத்துவதற்காக கடந்த காலத்தை கொச்சைப்படுத்துவதற்குமில்லை. நான் ஆயுதம் ஏந்திப் போராடியவன் தான். போராட்டத்தையும், அதன் வடிவத்தையும் தீர்மானிப்பது அந்தந்தச் சூழல் தான். இன்றைய சூழலில் போராட்ட வடிவத்தில் மாற்றங்கள் தேவையென்றே கருதுகின்றோம்.

இறுதித் தீர்வுக்காகவே நாம் உறுதியோடு உழைத்து வருகின்றோம். இறுதித் தீர்வு கிடைக்கும் வரை அன்றாடப்பிரச்சினைகளின் அவஸ்தைகளினால் மக்கள் நலிந்து போய்விடக்கூாது என்பதிலும் நாம் கவனமாயிருக்கின்றோம்.

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மட்டுமே கவனஞ்செலுத்தி இறுதித் தீர்வுக்கான முயற்சிகளைப் பின்போடுவதும், இறுதித் தீர்வின் முயற்சிகளுக்காக அன்றாடப் பிரச்சினைகளைக் கைவிட்டிருப்பதும் தவறான வழிமுறையென்றே நாம் கருதுகின்றோம். இரண்டையும் சேர்த்தே நாம் செய்யவேண்டும். மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் அனைத்தையுமே எம்மால் தீர்த்துவைக்க முடிகின்றது என்று நாம் கூறிவிடவில்லை. எமது சக்திக்கு உட்பட்டவரையில் செய்து வருகின்றோம். எமது முயற்சிகள் இன்னமும் செப்பனிடப்பட்டும், விரிவாக்கப்பட்டும் செய்யப்படவேண்டும் என்பதை நாம் உணர்கின்றோம்.

எமது முயற்சிகள் யாவும் விரிவாக்கப்படுவதற்கும், அதன் இலக்கு விரைவாக்கப்படுவதற்கும் மக்களாகிய நீங்களே எமக்கு இன்னமும் தோள் கொடுக்கவேண்டும். நீங்கள் எமக்களித்த அங்கீகாரம் தான் உங்களுக்காக எம்மைப் போராடவும், வாதாடவும் வைத்திருக்கின்றது. விட்டுக் கொடுக்க முடியாத மக்களின் நலன்... அதிலிருந்து உருவான எமது தனித்துவம்... அதையொட்டிய ஒரு வேலைத்திட்டம்... இந்த அடிப்படையிற் தான் அரசதரப்போடு நாம் பேசியும் வருகின்றோம்.

மக்கள் என்ற கடலில் நாம் வெறும் சமுத்திரத்துளிகள்தான். ஆனாலும் எல்லாப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டும் என்ற முயற்சிகள் எம்மிடம் இருக்கின்றன. இறுதித் தீர்வை எட்டிவிடமுடியும் என்ற நம்பிக்கையும், மனோபலமும் உங்கள் பங்களிப்பிலேயே எமக்குக்கிடைத்தது. இது இன்னமும் வளரவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

என்றும் நாம் மக்களின் நண்பர்கள்.
தேசத்திற்காக தியாகங்ளை ஏற்போம்.

மக்கள் சேவையிலுள்ள
கே. என். டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
01 - 07 - 20000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்